| R8197 |
|---|

| Sub. Code |
|---|
| 411401 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023**

**Fourth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியங்கள்**

**(CBCS – 2019 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. எட்டுத் தொகை நூல்களில் அகநூல்களைக் குறிப்பிடுக.

2. "உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி நினைந்தனென் அல்லெனோ பெரிதே? " என்று பாடியவர் யார்?

3. "இம்மை மாறி மறுமை ஆயினும், நீஆகியர் எம் கணவனை; யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே" என்ற பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

4. "ஒரு முலை அறுத்த திருமாவுண்ணிக் கேட்டோர் அனையர் ஆயினும், வேட்டோர் அல்லது, பிறர் இன்னாரே" என்ற பாடல் இடம் பெற்றுள்ள திணை யாது?

5. அகநானூற்றுப் பாடலில் ஒன்று, மூன்று, ஏழ், ஒன்பான் என்ற எண்ணிக்கை கொண்டுள்ள திணை எது?

6. ஐங்குறுநூற்றில் முல்லைத் திணையினைப் பாடியவர் யார்?

7. பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்து யார், யாரைப் பாடியது?

8. குறிஞ்சிப்பாட்டைப் "பெருங்குறிஞ்சி" என்று சிறப்பித்துக் கூறியவர் யார்?

9. விறலியரின் கேசாதிபாத வருணனையைக் கூறும் நூல் எது?

10. பரிபாடலில் கடுவன் இளவெயினார் பாடிய கடவுள் யார்?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னும், பின்னும் அமையும் தலைவியின் நிலையினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூறு – பற்றி விளக்குக.

12. (அ) புறநானூற்றுப் பாடல் வழி நிலையாமையை உணர்த்தும் நிலையினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து – குறிப்பு வரைக.

13. (அ) திணைப்புனம் காத்த வகையினைக் குறிஞ்சிப்பாட்டின் வழி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வஞ்சிமாநகரின் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க.

14. (அ) பரிபாடலில் வையையின் நீர் வருணனைப் பற்றி கூறுக.

(அல்லது)

(ஆ) நால்வகை யுகங்களில் காணலாகும் சிறப்புக்களைக் கூறுக.

15. (அ) தலைவன் ஒருவழித்தணந்த இடத்துத் தலைவி ஆற்றாமையை நெய்தற்கலி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) அகநானூறு – குறிப்பு வரைக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இரவுக்குறி வந்த தலைமகனை வரவு விலக்கி வரைவு கடாயதும், பகற்குறிக்கண் தோழி தலைமகற்குச் சொல்லிய விதத்தினையும் அகநானூற்று பாடலின் வழி விளக்குக.

17. செல்வகடுங்கோ வாழியாதனின் சிறப்புகளையும் ஆட்சித் திறனையும் தொகுத்துரைக்க.

18. தலைவன், தலைவியின் மாண்பினை குறிஞ்சிப்பாட்டின் வழி விளக்குக.

19. பாணனின் வறுமை நிலையினை எடுத்துரைத்து ஆற்றுப்படுத்தலை ஆராய்க.

20. வையையின் சிறப்பினை நும் பாடப்பகுதி கொண்டு திறனாய்க.

———————

| R8198 |
|---|

| Sub. Code |
|---|
| 411402 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023

### Fourth Semester

தமிழ்

இலக்கணம், தொல்காப்பியம் பொருளதிகாரம் (பின்னான்கு இயல்கள்)

**(CBCS – 2019 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. பெருமித மெய்ப்பாடு பெறும் நான்கு நிலைகள் யாவை?

2. அகத்திற்குரிய மெய்ப்பாடுகளில் முதல் நிலையினைக் கூறுக.

3. உவமை பெறும் நிலைக் களத்தைக் கூறுக.

4. வினை உவமம் பெறும் சொற்களைக் கூறுக.

5. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

6. கலிப்பாவின் வகைகளைக் கூறுக.

7. நூல் அமையும் நான்கு வகையினைக் கூறுக.

8. களவியல் கூற்றுக்கு உரியவர் யார்?

9. —————— பெறுமே குழவிப் பெயர்க் கொடை

10. குட்டி என்னும் இளமைப் பெயர்க்குரியவை எவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மெய்ப்பாடு என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

(அல்லது)

(ஆ) தலைமக்கட்குரிய ஒப்புமையும், தலைமக்கட்கு ஆகாத மெய்பாடுகளையும் கூறுக.

12. (அ) உவமையின் நிலைக்களன்களை சான்றுடன் கூறுக.

(அல்லது)

(ஆ) உள்ளுறை உவமத்தினைச் சான்றுடன் கூறுக.

13. (அ) வெண்பாவின் இலக்கணம் கூறி வகைகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவின் இலக்கணம் கூறி வகைகளைச் சுட்டுக.

14. (அ) அடி என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

(அல்லது)

(ஆ) வண்ணக ஒத்தாழிசைக் கலியின் வகைகளை விவரி.

15. (அ) தொல்காப்பியர் கூறும் நால்வகை வர்ணத்தாரைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் கூறும் புல், மரத்தின் உறுப்புகளைக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. எண் வகை மெய்ப்பாட்டின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

17. உவமப் பாகுபாட்டின் வகைகளையும், அவை பெறும் உவமச் சொற்களையும் சான்றுடன் விளக்குக.

18. தொடை என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

19. வண்ணம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

20. ஆண்பால், பெண்பாலுக்குரிய இளமைப் பெயர்களை விளக்குக.

———————